# மெதகம பிரதேச சபை
# மொனராகலை மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 யூலை 24 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 யூன் 03 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2012 நவம்பர் 19 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசீலனைகளிலிருந்து தென்படுவதும் எனக்களிக்கப்பட்ட அதி உயர் தகவல்கள், விளக்கங்கள் என்பவற்றிற்கமையவும் மெதகம பிரதேச சபையின் 2011 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்காக உரிய கணக்கு அறிக்கைகள் பேணப்பட்டுள்ளன என்றும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள எனது அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டவாறான விடயங்களின் மூலம் நிதிசார் கூற்றுக்களில் ஏற்படும் தாக்கங்களைத் தவிர, 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மெதகம பிரதேச சபையின், செயற்பாட்டு நிலவரத்தையும் அத்தினத்தில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் செயற்பாட்டு விடயங்களின் நிதிப் பெறுபேறுகள் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தோற்றும் விதத்தில் பொதுவாக அங்கீகரிக்கப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கேற்ப நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 20,503,506 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 3,948,773 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 3,273,526 ஆக இருந்தது.

## 2.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்குரிய நிதிக் கூற்றுக்களின் பெறுமதி மற்றும் பாதீடு செய்யப்பட்ட பெறுமதி என்பவற்றை இணக்கஞ் செய்த போது வாடகைப் பணம், அனுமதிப்பத்திரக் கட்டணம், சேவைக் கட்டணம், பிடியாணைக் கட்டணம் மற்றும் தண்டப் பணம் போன்ற வருமானத் தலைப்புக்களில் 40% தொடக்கம் 291% வரையிலும் பிரயாணச் செலவுகள், மூலதனச் சொத்துக்களை பழுதுபார்த்தல் போன்ற செலவின விடயங்களில் 29% தொடக்கம் 45% வரையிலும் முரண்கள் காணப்பட்டன.

## 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 267 | 193 | 626 |
| (ii) | வாடகை | 4,154 | 4,245 | 1,320 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 674 | 674 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 13,732 | 13,686 | 796 |

### 2.3.2 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய தொகை கீழே காட்டப்படுகின்றது.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதிமன்ற தண்டப்பணம் | 1,912,795 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 598,945 |

## 2.4 செயற்பாடற்ற பௌதீக வளங்கள்

---

ரூபா 650,000 பெறுமதியான கப் வாகனம் மற்றும் ரூபா 10,000 பெறுமதியான நிழற்பட பிரதி இயந்திரம் என்பன செயற்பாடற்றுக் காணப்படுகின்றமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டன.

## 2.5 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அறவிட வேண்டிய ஊழியர் கடன் முற்பண மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,000,348 ஆக இருந்ததுடன் ஒரு வருட காலத்தை விஞ்சி அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 928,348 ஆக இருந்தது.

(ஆ) 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 01 வருடகாலத்தை விஞ்சிய செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 274,703 ஆக இருந்தது.

(இ) மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 5,262,818 கூட்டுத்தொகையான நிலுவை வருமானம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஈ) சபைக்குச் சொந்தமான காணி மற்றும் கட்டிடங்கள் மெய்மையாய்வுச் சபையின் மூலம் பரீட்ச்சிக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

---

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டப்பாட்டுப் பகுதிகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) உள்ளகக் கட்டுப்பாடு

(ஆ) வருமான நிருவாகம்